*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*14 08-2025 THURSDAY 6.30 PM*
*<u>மாநிலச் செய்திகள்</u>*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

- *சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.*

- *ஜல்ஜீவன் இயக்கம் மக்களின் வாழக்கைத் தரத்தை மேம்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

- *கடந்த 11 ஆண்டுகளில் நாட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் பெருமளவுக்கு மேம்படுத்தப்பட்டிருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

- *மலைவாழ் மாணவர்கள் மருத்துவப்படிப்பில் சேருவதற்கு அஇஅதிமுக முயற்சி எடுக்கும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.*

- *சிங்கப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Abhinav Sanjeev – Manish Suresh Kumar இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<<>>>>>*

*சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.*

*குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் ஒலிபரப்பாகிறது.*

*அதைத் தொடர்ந்து குடியரசுத்தலைவரின் உரை, மாநில மொழிகளில் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் பிராந்திய அலைவரிசைகளில் ஒலிபரப்பாக உள்ளது.*

*அத்துடன் குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணியின் பிராந்திய அலைவரிசைகளில் இரவு மணி 9.30-க்கு மாநில மொழிகளில் ஒலிபரப்பாகும்.*

*குடியரசுத் தலைவர் உரை காரணமாக இன்றிரவு மணி 7.15-க்கு ஒலிபரப்பாக வேண்டிய ஆகாஷ்வாணி செய்தியறிக்கை, இரவு எட்டு மணிக்கு ஒலிபரப்பாகும்.*

*<<<<<>>>>>*

*அனைத்து வீடுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திற்காக கொண்டுவரப்பட்ட ஜல்ஜீவன் இயக்கம் மக்களின் வாழக்கைத் தரத்தை உயர்த்தி, கண்ணியமான வாழ்வை உறுதி செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*ஜல்ஜீவன் இயக்கம் தொடங்கப்பட்டு ஆறு ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் அனைவருக்கும் கிடைப்பதன்மூலம், மக்களின் உடல்நலன் பாதுகாக்கப்படுவதாக கூறியுள்ளார்.*

*இந்த இயக்கத்தின்மூலம் கிராமப்புற மக்களுக்கும், குறிப்பாக பெண்களுக்கும் ஆரோக்கியமான வாழ்வு கிடைத்திருப்பதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.*

*மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கோடிக்கணக்கான கிராமப்புற குடும்பங்களின வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஜல்ஜீவன் இயக்கம் ஏற்படுத்தியுள்ளதாகவும், வருங்கால சந்ததியினருக்கும் சுகாதார பாதுகாப்பை அளித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.*

<<<<<>>>>>

*இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தின்கீழ், தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் இன்று பேரணி நடைபெற்றது.*

*சென்னை ராயபுரத்தில் பிஜேபி சார்பில் நடைபெற்ற வாகன பேரணியை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தொடங்கி வைத்தார்.*

*நிகழ்ச்சியில் பேசிய அவர், மத்தியில் பிஜேபி ஆட்சிப்பொறுப்பேற்ற பின் நாட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் பெருமளவுக்கு மேம்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.*

*(Voice Byte – எல். முருகன் – 45 Sec.)*

*காஞ்சிபுரத்தில் அஞ்சல் கோட்டம் சார்பில், தலைமை அஞ்சலகத்தில் தொடங்கி பழைய ரயில் நிலையம் வரை நடைபெற்ற மூவர்ண கொடி பேரணியில் அஞ்சலக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.*

*அப்போது பேசிய அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திரு அருள்தாஸ், நாட்டு மக்கள் அனைவரும் தங்களது இல்லங்களில் தேசியக்கொடி ஏற்றுவதற்காக அஞ்சலகங்களில் கொடி விற்பனை செய்யப்படுவதாக தெரிவித்தார்.*

*(Voice Byte – அருள்தாஸ் – 45 Sec.)*

*நாமக்கல்லிலும் அஞ்சல் கோட்டம் சார்பில், தலைமை அஞ்சலகம் அருகில் தொடங்கி, நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்ற பேரணியில் கலந்துகொண்ட அஞ்சலக ஊழியர்கள் மக்கள் அனைவரும் தங்களது இல்லங்களில் தேசியக்கொடி ஏற்றுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.*

*சேலம் மாவட்டம் மேட்டூரில் நடைபெற்ற பேரணியில் 100 அடி நீளம் கொண்ட தேசியக்கொடி எடுத்துச்செல்லப்பட்டது.*

*<<<<<>>>>>*

*அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தால், மலைவாழ் மாணவர்களுக்கு உரிய பயிற்சி அளித்து அரசுப்பள்ளி மாணவர்களுக்கான ஒதுக்கீட்டில் மருத்துவப்படிப்பில் சேர நடவடிக்கை எடுக்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.*

*திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், ஏலகிரி மலை மிகச்சிறந்த சுற்றுலாத் தளமாக மேம்படுத்தப்படும் என்றும் கூறினார்.*

*இப்பகுதியில் உள்ள மலை கிராமங்களுக்கு செல்லும் சாலைகள் சீரமைக்கப்படுவதோடு, குடிநீர் மற்றும் மருத்துவமனை வசதிகள் ஏற்படுத்தப்படும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.*

*<<<<<>>>>>*

*நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் - 30 Sec.)*

*<<<<<>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

*நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் மற்றும் கீழையூர் ஊராட்சி ஒன்றியங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் பசுக்களுக்கு 50 சதவீத மானிய விலையில் ஊட்டச்சத்து வழங்கப்பட உள்ளதாக ஆட்சியர் திரு ஆகாஷ் தெரிவித்துள்ளார்.*

---------------

*காஞ்சிபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான சிறப்பு தீர்ப்பாயத்தை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு எம் எம் ஸ்ரீவஸ்தவா காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.*

-------------------

*சென்னை ஐ ஐ டி-யில் பாரத ஸ்டேட் வங்கி அறக்கட்டளையுடன் இணைந்து, பாரா தடகள வீரர்களுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அந்த வங்கியின் தலைமை செயல் அதிகாரி திரு சஞ்சய் பிரகாஷ் இன்று தொடங்கிவைத்தார்.*

--------------------

*மும்பை லோக்மான்ய திலக் ரயில் நிலையத்திலிருந்து, வேளாங்கண்ணிக்கு இம்மாதம் 26-ஆம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. மறுமார்க்கத்தில் இந்த ரயில் வேளாங்கண்ணியிலிருந்து 28-ஆம் தேதி புறப்படும்.*

-----------------------

*சென்னை மாநகர பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை கடத்தி வந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

---------------

*மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அரசு மருத்துவமனையில் தாய்பால் வார விழாவையொட்டி கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டது.*

<<<<<>>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

*சிங்கப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Abhinav Sanjeev – Manish Suresh Kumar இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*இன்று நடைபெற்ற இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், இந்த இணை 6-3, 7-5 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Kosuke Ogura – Keisuke Saitoh இணையை வென்றது.*

-------------

சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Mukund Sasikumar, Sidharth Rawat* ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பாலியில் நடைபெற்றுவரும் ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் *Mukund Sasikumar, 6-2, 6-0* என்ற செட் கணக்கில், ஜப்பானின் *Shunsuke Nakagawa* -வை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில், *Sidharth Rawat 7-6, 6-2* என்ற செட் கணக்கில், நியூசிலாந்தின் *Alexander Klintcharov* -வை வென்றார்.

--------------

தாய்லாந்து சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Dhruv Negi, Bharat Raghav, Pranay Katta* ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*<<<<<END>>>>>*